மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
தொகுதி-2 பதிப்பு-4 டிசம்பர் 2022 | E-ISSN: 2583-0449

# செவ்விலக்கியங்களில் இயல்பான காலங்களில் கால பகுப்பு

**செ.வே. செல்வம்,**

*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வி.இ.நா. செந்தில்குமார நாடார் கல்லூரி, விருதுநகர், இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**செவ்விலக்கியங்கள் இயல்பான காலங்களில் கால பகுப்பு எவ்வாறு இருந்தது பற்றியும், இயல்பு என்பதன் விளக்கம் பற்றியும், இயல்பான காலங்களில் வாழிடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றி ஆய்வுச் செய்யப்பட்டுள்ளது.**

## கருச்சொற்கள்

**செவ்விலக்கியம், பொழுதுகள், பெரும்பொழுது, சிறுபொழுது, வாழிடங்கள்**

## ஆய்வு அணுகுமுறைகள்

இவ்வாய்வில் இயல்பான காலங்களை வரையறையைச் செய்து கூறும் போது விளக்க முறைத் திறனாய்வு அணுகுமுறையும், காலங்களைப் பகுத்து கூறும் போது பகுப்பாய்வு திறனாய்வு அணுகுமுறையும் காலங்களில் நிகழும் செயல்பாடுகளைப் பற்றி கூறும் போது படைப்பு வழி திறனாய்வு அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

## முன்னுரை

தமிழர்களின் பண்பாட்டினைப் பிரதிபலிப்பவனாகவும் பண்டைய கால மக்களின் வாழ்வியலை எடுத்துகூறும் கருவூலமாகவும் இருப்பவை செவ்விலக்கியங்கள் ஆகும். தினசரி வாழ்வு என்பது நம் வாழ்வியலில் மிக முக்கிய பதிவாகும். அதனைப் பற்றிய அக்கறைகள் நமக்குள் இருப்பதில்லை. முக்கிய நாட்கள் என்பது எதுவும் கிடையாது. எல்லா நாட்களும் முக்கியமான நாள்தான் என்பதனை அறிவுறுத்தவே இவ்வியல் ஆய்வின் காரணியாக அமைந்தது. இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட ஒரு நாள் நிகழ்வதற்கு காரணம் பூமி சுற்றுவதாகும் என்று வெளிநாட்டு அறிஞர்கள் கண்டுபிடித்தாக இன்றைய அறிவியல் கூற்று அமைந்தது. ஆனால் இதனை உண்மையில் பல் நூற்றாண்டுக்கு முன் நம் தமிழர் கண்டுபிடித்துள்ளனர். மனிதன் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள் அந்த வாழ்க்கைக்கான இலக்கணத்தில் பொழுதினைப் பிரிக்க இயலாது. செவ்விலக்கியங்களில் வாழ்வியல் சம்பந்தமான கருத்துக்களை இலக்கியமாக வகுத்துக் கூறும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பொழுதுகள் காணப்படுகின்றன. செவ்விலக்கிய நிகழ்வுகள் எல்லாம் பொழுதுகளிலேயே